# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, செத்தெம்பர் மாதம் 01 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 30.25** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்

[2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ 2/2005

**பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாத்தல் பற்றிய கொள்கையை இனங்காணும் நோக்கத்துக்காகவும் ; புகையிலை உற்பத்திப் பொருட்கள் மற்றும் மதுசார உறப்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதை, சந்தைப்படுத்துவதை அத்துடன் நுகரப் படுவதை மதிப்பீடு செய்வதன் மூலமும் கண்காணிப்பதன் மூலமும் புகையிலை மற்றும் மதுசாரம் சம்பந்தப்பட்ட தீங்கை ஒழிப்பதற்காகவும் ; புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அத் துடன் புகையிலை உற்பத்திப் பொருட்கள் மற்றும் மதுசார உற்பத்திப் பொருட்கள் கிடைக்கக் கூடியனவாக இருக்கும் வாய்ப்புகளைக் குறைப்பதன் மூலம், புகைத்தல், மது அருந்துதல் ஆகியவற்றில் ஈடுபடுவதிலிருந்து ஆட்களை, குறிப்பாகச் சிறுவர்களை, தடைசெய்வதற்கான ஏற்பாட்டை ஆக்குவதற் கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளி யிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

### பாகம் I

*புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையைத் தாபித்தல்.*

**2.** (1) (இதனகத்துப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை என அழைக்கப்பட வேண்டிய அதிகாரசபை யொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாயிருத்தலும் வேண்டும், அத்துடன் அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அதிகார சபையின் உறுப்பினர்கள்.*

**3.** (1) அதிகாரசபை, அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குகக் குறையாத பதவியிலுள்ளவரும், அவ்வமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலர் ஒருவர் ;

(ஆ) நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ளவரும், அவ்வமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலர் ஒருவர் ;

(இ) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ளவரும், அவ்வமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலர் ஒருவர் ;

(ஈ) வெகுசனத் தொடர்புத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ளவரும், அவ்வமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலர் ஒருவர் ;

(உ) வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவியிலுள்ளவரும், அவ்வமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலர் ஒருவர் ;

(ஊ) விளையாட்டுக்கள், இளைஞர் விவகாரங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவியிலுள்ளவரும், அவ் வமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வருமான அலுவலர் ஒருவர் ;

(எ) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தவிசாரளர் ;

(ஏ) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியின் பிரதிநிதியொருவர் ;

(ஐ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(ஒ) மருத்துவத்துறையிலும் புகையிலை உற்பத்திப் பொருட்களினதும் மதுசார உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தி தொடர்பான வேறு துறைகளிலும் பரந்த அனுபவமும் அறிவும் பெற்ற ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள்.

(2) ஒராம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின்கீழ் நியமிக் கப்பட்ட உறுப்பினர்கள், இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.

*உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கெதிரான தகைமையீனம்.*

4. ஆளொருவர் –

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால் ;

(ஆ) அவர், இலங்கைப் பிரசை ஒருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால் ;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவில் இருக்கின்ற ஏதேனும் சட்டத்தின் கீழ்ச் சித்தசுவாதீனமற்றவர் எனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) அவர், இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப் பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித் துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(உ) அவர், அதிகாரசபையினால் அல்லது அதிகார சபையின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத் தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால் ; அல்லது

(ஊ) அவர், அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அவரது கடமைகளை அவர் நிறைவேற்றுவதைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங் கொண்டவாறான அத்தகைய ஏதேனும் நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்,

அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதி லிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்ற வராதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுதலும் பதவியிலிருந்து விலகலும்.

**5**. (1) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அது எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ, அத்தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக் காக அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவியிலிருந்து விலகுகின்றவிடத்து அல்லது அகற்றப்படுகின்றவிடத்து, அமைச்சர், 3 ஆம் பிரிவின் ஏற்பாடு களைக் கருத்திற்கொண்டு அவரின் இடத்துக்கு இன்னோர் உறுப்பி னரை நியமிக்க வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

**6**. ஐந்தாம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிக்காலமானது, மூன்றாண்டுகளாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம் அல்லது படி.

**7**. அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் தவிசாளர்.

**8**. (1) அமைச்சர், அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை அதிகாரசபையின் தவிசாளராக இருக்கவென நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய தவிசாளர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தலும் வேண்டும்.

(2) தவிசாளரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டுமென்பதுடன், அவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருந்தால், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அதிகாரசபையின் இன்னோர் உறுப்பினரை அமைச்சர் நியமிக்கலாம்.

(4) தவிசாளர், அமைச்சரின் அங்கீகாரமின்றி, தமது பதவிக்குரிய கடமைகளுக்கு வெளியே கொடுப்பனவுடனான தொழில் எதிலும் ஈடுபடுதலாகாது.

(5) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அமைச்சரினால் அது எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(6) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளரை தவிசாரளர் பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) நாலாம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய, அதிகாரசபையில் தவிசாளருக்கு உள்ள உறுப்பாண்மைக் காலப்பகுதியே அவரது பதவிக்காலமாதல் வேண்டும்.

*அதிகார சபையின் கூட்டங்கள்.*

**9.** (1) தவிசாளர், சமுகமாயிருந்தால், அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்த கைய ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் சமுகமளித்திருக்காத விடத்து, சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப் பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) தவிசாளருக்கு அல்லது அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் வேறு உறுப்பினருக்கு, அவரது சொந்த வாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றும் இருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, அதிகார சபையானது, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பிலான மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவது தொடர்பிலான நடவடிக்கை முறையை ஒழுங்கு படுத்தலாம்.

*வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக செயல்கள் செல்லுபடி யற்றன வாதலாகாது என்பது.*

**10.** அதிகாரசபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதிகாரசபையில் வெற்றிடமொன்று இருப்பதன் காரணத்தினால் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதெனக் கருதப்படலாகாது.

*அதிகாரசபையின் இலச்சினை.*

**11.** (1) அதிகாரசபையின் இலச்சினை, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டு வடிவமைக்கப்படலாம். அத்துடன், அது, அதிகாரசபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினை, காலத்துக்குக்காலம் அதிகாரசபை முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினை, அதிகாரசபையின் அனுமதியுடனும், தவிசாளரினதும் உறுப்பினர் ஒருவரினதும் சமூகத்திலும் தவிர, ஏதேனும் சாதனத்திலோ அல்லது ஆவணத்திலோ பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் இவர்கள், தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பம் இடுதலும் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, அதன் இலச்சினை எச்சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டிருக்கிறதோ, அச்சாதனங்கள் மற்றும் ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

*அதிகாரசபையானது அமைச்சரின் பணிப்பின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல்.*

**12.** அதிகாரசபையானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் பணிகளை நிறைவேற்றுகையிலும், அமைச்சரினால் காலத்திற்குக் காலம் அதற்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :

ஆயின், அவ்வாறு வழங்கப்படும் ஏதேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்கு அதிகாரசபை இணங்கியொழுகுதலானது, அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

*அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தல்.*

**13.** (1) அதிகாரசபை, அதன் தத்துவங்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றில் எவற்றையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றுள் எவையும் கையளிக்கப்பட்டிருக்கும் தவிசாளர், அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும், அதிகாரசபையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைய, பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் பணிகள்.*

**14.** அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :—

(அ) புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள் கையைச் செயற்படுத்துவதில் அரசாங்கத்துக்கு மதி யுரை அளித்தல் ;

(ஆ) வெகுசனத் தொடர்புத்துறை அனுசரணைகள் ஊடாக வும் சமுதாய அடிப்படையிலான கருத்திட்டங்கள் ஊடாகவும் சுகாதார மேம்பாட்டுக்கு ஊக்குவிப்பும் உதவியும் அளித்தல் ;

(இ) புகையிலை உற்பத்திப் பொருட்களையும் மற்றும் மதுசார உற்பத்திப் பொருட்களையும் நுகர்வதினால் எழும் தீங்கைக் கூடியளவு குறைப்பதற்கான வழி முறை களை விதந்துரைத்தல் ;

(ஈ) கள்ளமான ஔடதப் பயன்பாட்டை ஒழிப்பதற்காகவும் அல்லது கூடியளவு குறைப்பதற்காகவும், தேசிய அபாயகரமான ஔடதங்கள், கட்டுப்பாட்டுச் சபை யின் கலந்தாலோசனையுடன் வழிமுறைகளை விதந்து ரைத்தல் ;

(உ) புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள் கையைச் செயற்படுத்துவதற்கு அவசியமான சட்டரீதி யான, வரிவிதிப்பு, நிருவாகம் மற்றும் வேறு வழிமுறை களை விதந்துரைத்தல் ;

(ஊ) அத்தகைய கொள்கை செயற்படுத்தப்படுதலைக் கண் காணித்தலும், மதிப்பீடு செய்தலும் ;

(எ) தாக்கக் கொள்கை வழிமுறைகளை மதிப்பீடு செய்த லும், அவசியமாகக்கூடியவாறாகக் கொள்கையின் அத்தகைய திரிபுகள் பற்றி அரசாங்கத்துக்கு மதியுரை யளித்தலும் ;

(ஏ) புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான விடயங்கள் மீதான ஆராய்ச்சியை ஊக்குவித்தலும், அதற்கு உதவி யளித்தலும் ;

(ஐ) புகையிலை உற்பத்திப் பொருட்களின் மற்றும் மதுசார உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பொருளாதார, சுகாதார மற்றும் வேறு விடயங்களைக் கண்காணித்தல்;

(ஒ) புகையிலை மற்றும் மதுசாரத்தின் பயன்பாடு தொடர் பாக ஆராய்ச்சியை நடாத்துதலும், மேம்படுத்தலும் அத்துடன் ஒருங்கிணைத்தலும் ;

(ஓ) புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசியக் கொள் கையைச் செயற்படுத்துவதில் அவசியமான எல்லா அரசாங்க அல்லது அரசாங்கஞ்சாரா முகவர் நிலையங்கள் மற்றும் தனியார்துறை ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றைப் பங்குபற்றச் செய்தல் ;

(ஔ) புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசிய கொள்கை யைச் செயற்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் தீவிரமான சமுதாயப் பங்கேற்பை ஊக்குவித்தல் ;

(க) புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான விடயங்கள் மீது பொதுமக்களிடமிருந்து தொடர்புகளைப் பெறு தலும் மற்றும் செயற்படுத்துகின்ற முகவர் நிலையங் களுக்கு அது தொடர்பில் அவசியமான நடவடிக் கையை விதந்துரைத்தலும் ;

(ங) புகையிலை உற்பத்திப்பொருட்கள் மற்றும் மதுசார உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலி ருந்தும், நுகர்விலிருந்தும் எழுகின்ற தீங்கைக் கூடிய ளவு குறைப்பது தொடர்பாக அரசாங்கத்தினாலும் மற்றும் அரசாங்கஞ்சாரா முகவர் நிலையங்களி னாலும் ஒழுங்கமைப்புகளினாலும் நிறைவேற்றப் படும் எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஒருங்கிணைப்பு முகவர் நிலையமாகச் செயற்படுதல் ;

(ச) புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான எல்லா நுண்ணாய்வுகளினதும் முன்னேற்றத்தைக் கண் காணித்தல் ;

(ஞ) புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான விடயங்கள் பற்றி உள்ளூர் பிராந்திய மற்றும் சர்வதேச ஒழுங்க மைப்புகளுடன் இணைந்து செயலாற்றுதல்.

**15.** அதிகாரசபையானது — *அதிகாரசபையின் தத்துவங்கள்.*

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத் தைக் கொள்வதற்கு, வைத்திருப்பதற்கு, குத்தகைக்கு

அல்லது வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது கொடுப்ப தற்கு, ஈடுவைப்பதற்கு, அடகுவைப்பதற்கு, விற்பதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மேல் பணங் களைப் பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ கடனாகப் பெறுவதற்கு ;

(இ) காசாவோ அல்லது வேறுவகையாகவோ கொடை களை, மானியக்கொடைகளை அல்லது நன்கொடைக ளைப் பெற்றுக் கொள்வதற்கு அத்துடன் அவற்றை, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பிரயோகிப் பதற்கு ;

(ஈ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர் களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கு ;

(உ) அதன் பணிகளை பயனுள்ளவகையில் நிறைவேற்று வதற்காக உபகுழுக்களை நியமிப்பதற்கு அல்லது மாகாண மட்டத்தில் அலகுகளுடன் ஒருங்கிணை வதற்கு ;

(ஊ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவை யாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியத் தைத் தீர்மானிப்பதற்கு ;

(எ) அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் சமூக பாதுகாப்புத் திட்டம் ஒன்றைத் தாபிப்பதற்கு அத்துடன் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதி களை வழங்குவதற்கு ;

(ஏ) அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற் கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ செய்துகொள்வதற்கு அத்துடன் புரிவதற்கு ;

(ஐ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் கருமம் பற்றி விசாரணை செய்வதற்கு மற்றும் நுண்ணாய்வு செய்வதற்கு ;

(ஒ) அரசாங்கம் உறுதிப்படுத்தி இணங்கிக் கொள்ளக் கூடியவாறு புகையிலையையும் மதுசாரத்தையும் கையாளுகின்ற அத்தகைய சர்வதேசப் பொருத்தனை களையும் சமவாயங்களையும் கடைப்பிடிப்பதனை விதந்துரைப்பதற்கு ;

(ஓ) அதிகாரசபையின் பணிகள் தகுந்த முறையில் நிறை வேற்றப்படுவதனை வசதிப்படுத்துவதற்கு அவசிய மானவாறான அத்தகைய வேறு எல்லா கருமங்களை யும் பொதுவாகச் செய்வதற்கு,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

*அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர்கள்.*

**16.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக —

(அ) அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றவாறான எவரே னும் உணவு, ஔடதப் பரிசோதகர் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ; அத்துடன்

(ஆ) எவரேனும் பொலிசு அலுவலர் அல்லது மதுவரி அலுவலர்,

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவராதல் வேண்டும்.

*அதிகாரமளிக் கப்பட்ட அலுவலரின் தத்துவங்கள்.*

**17.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியினது மீறுகை யொன்று இருந்துள்ளதென எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ள விடத்து, அவர், நீதிவானின் அங்கீகாரத்தைப் பெற்றதன் மேல் சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப் பட்ட தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை முன் னெடுத்துச் செல்வதில் —

(அ) ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருள் அல்லது மதுசார உற்பத்திப் பொருள் உற்பத்தி செய்யப்படு கின்றது, தயாரிக்கப்படுகின்றது, பேணிக்காக்கப்படு கின்றது, பொதியிடப்படுகின்றது, விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படுகின்றது அல்லது களஞ்சி யப்படுத்தப்படுகின்றது என அவர் நம்புகின்ற ஏதே னும் இடத்தினுள், ஏதேனும் நியாயமான நேரத்தில்

பிரவேசித்து, அத்தகைய புகையிலை உற்பத்திப் பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளைப் பரிசோதனைசெய்து அதன் மாதிரிகளை எடுக்கலாம்; அத்துடன் அந்தப் புகையிலை உற்பத்திப் பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வதற்கு, தயாரிப்பதற்கு, பேணிக்காப்பதற்கு, பொதியிடுவதற்கு அல்லது களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றதென அவர் நம்புகின்ற எதனையும் பரிசோதனை செய்யலாம் ;

(ஆ) வலிதான தேடுகைச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்காக, ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப் பொருள் கொண்டுசெல்லப்படுகின்றதென அவர் நம்புகின்ற ஏதேனும் வாகனத்தை நிறுத்தலாம் அல்லது தடுத்துவைக்கலாம் என்பதுடன், அவ்வாகனத்தை தேடுகையிட்டு அத்தகைய உற்பத்திப் பொருளைப் பரிசோதனை செய்யலாம் ; அத்துடன் அவ்வாறு கொண்டு செல்லப்படுகின்ற ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளின் அல்லது மதுசார உற்பத்திப் பொருளின் மாதிரிகளையும் எடுக்கலாம் ;

(இ) ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளைக் கொண்டுள்ளதென அவர் நம்புகின்ற ஏதேனும் கொள்கலத்தை அல்லது பொதியைத் திறந்து பரிசோதனை செய்யலாம் ;

(ஈ) எந்தப் புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப் பொருள் மூலம் அல்லது அது தொடர்பாக இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி மீறுப்பட்டுள்ளதென அவர் நம்புகின்றாரோ அந்தப் புகையிலை உற்பத்திப் பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளை அவசியமாகக் கூடியவாறான அத்தகைய காலத்துக்குக் கைப்பற்றித் தடுத்துவைக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் செயலாற்றுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அவரது அதிகாரத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படின் அவ்வாறு காண்பிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவைப் பின்பற்றி அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் பிரவேசித்த இடத்தின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள், அத்துடன் அதன்கண் காணப் படும் ஆளொவ்வொருவரும், அவரது தத்துவத்துக்குட்பட்ட நியாய மான எல்லா உதவிகளையும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரொருக்கு அளித்தல் வேண்டுமென்பதுடன், அவருக்குத் தேவைப் படக்கூடியவாறான அத்தகைய தகவலையும் அத்தகைய மாதிரிக ளையும் அவருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரொருவரினால் பெறப்பட்ட தகவல், இச்சட்டத்தின் நிருவாகம் அல்லது வலுவுக்கிடுகை சம்பந்தமான நோக்கங்களுக்காக வேறு வகையாகத் தேவைப்படுத்தப்பட்டாலன்றி, அரசாங்கத் திணைக் களமொன்றுக்கு அல்லது நீதிமன்றமொன்றுக்குத் தவிர, வெளி விடப்படுதலாகாது.

(5) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின்கீழ் எவரேனும் அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதில் செயலாற் றும்போது, ஆளெவரும் அவருக்கு முட்டுக்கட்டையிடுதலாகாது.

(6) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவை யேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதில் ஈடுபட்டிருக் கும்போது, ஆளெவரும் அறிந்துகொண்டு ஒன்றில் வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்திலோ அவருக்கு எவையேனும் பொய்யான அல்லது பிறழ்வழியுய்க்கும் கூற்றுக்களை அளித்தலா காது.

(7) புகையிலை உற்பத்திப்பொருளின் அல்லது மதுசார உற்பத்திப் பொருளின் ஒவ்வொரு வியாபாரியும், அதிகாரமளிக் கப்பட்ட அலுவலரொருவரினால் அவ்வாறு தேவைப்படுத்தப் படின், அவ்வியாபாரி அந்தப் புகையிலை உற்பத்திப் பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளை எந்த ஆளிடமிருந்து கொள்வனவு செய்தாரோ அந்த ஆளின் பெயரையும், முகவரி யையும், தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு வெளிவிடு தல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப் பொருள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் விருப்பத்தெரிவின் பேரில், அது எக்கட்டிடத்தில் அல்லது இடத்தில் கைப்பற்றப்பட்டதோ அக்கட்டிடத்தில் அல்லது இடத்தில் வைத்திருக்கப்படலாம் அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது அவரது தற்றுணிபின்பேரில் வேறே தேனும் இடத்துக்கு அகற்றப்படலாம்.

(9) இச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் கைப்பற்றுகை பற்றி அதிகாரசபைக்கு உடன் அறிவிப்பது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் தொடர்பிலான நடவடிக்கை முறை.

**18.** எந்தப் புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப்பொருள் தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளதோ அந்தப் புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப்பொருள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்படுமிடத்து, அத்தகைய புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப் பொருள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி மீறப்பட் டுள்ளன அல்லது மீறப்பட்டுள்ளது என அதிகாரசபை திருப்திப்படுமிடத்து அத்துடன் நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளையொன்றைப் பெறுவதன் மேலும் அழித்துவிடப்படலாம்.

பகுப்பாய்வு.

**19.** (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அவரினால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது அவரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் மாதிரியை, 18 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அது அழித்துவிடப்பட்டிருந்தாலொழிய, பகுப்பாய்வுக்காக அல்லது பரிசோதனைக்காக அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அரசாங்கப் பகுப்பாய்வாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் புகையிலை உற்பத்திப்

பொருளின் அல்லது மதுசார உற்பத்திப்பொருளின் பகுப்பாய்வை அல்லது பரிசோதனையைச் செய்துள்ள பகுப்பாய்வின், தமது அல்லது பரிசோதனையின் பெறுபேறுகளைத் தருகின்ற சான்றிதழொன்றை அல்லது அறிக்கையொன்றை அதிகாரசபைக்கு அல்லது நீதிமன்றத்துக்கு வழங்குதல் வேண்டும்.

*அமைச்சர் பணிப்புகளை வழங்கலாம்.*

**20.** அமைச்சர், அதிகாரசபையின் மதியுரையின்மீது புகையிலை உற்பத்திப்பொருட்கள் மற்றும் மதுசார உற்பத்திப் பொருட்களின் பயன்பாடு தொடர்பாகப் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய செயல்களை நிறைவேற்றுமாறு ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை அல்லது நியதிச்சட்ட முறையான நிறுவனத்தை தேவைப்படுத்தி அத்தகைய பணிப்பை அத்தகைய ஏதேனும் திணைக்களத்துக்கு அல்லது நிறுவனத்துக்கு வழங்கலாம்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதி.*

**21.** (1) அதிகாரசபை, அதன் பணிகள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்கள், அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்மீது, பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிவதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ளவரான ஆள் எவரையும் அதிகாரசபையானது, தொழிலுக்கு அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்குப் புரியப்படும் சேவைக் காலப்பகுதி எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குப் புரியப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் நிதியம்.*

**22.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தை அதிகாரசபையானது கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்துக்குள் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்கத்தக்கனவாக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையினால் கொடைகள், மானியக்கொடைகள் அல்லது நன்கொடைகள் என்ற வகையாக இலங்கையிலிருந்தோசரி அல்லது வெளிநாட்டிலிருந்தோசரி பெறப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும், அதிகார சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**23.** (1) பஞ்சாங்க ஆண்டே அதிகாரசபையின் நிதியாண்டாக இருக்க வேண்டும்.

(2) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளினது கணக்காய்வு தொடர்பிலான அரசிலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*விபரத்திரட்டுக் களும் தகவலும்.*

**24.** (1) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழும் 15 ஆம் பிரிவின்கீழும் ஆன எவையேனும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதிகாரசபையை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, அதிகாரசபை அல்லது அதற்கென அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும், எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய ஆளுக்குத் தெரிந்திருக்கின்றவாறான அல்லது அத்தகைய ஆளின் உடைமையில் இருக்கின்றவாறான புகையிலை உற்பத்திப்பொருள் அல்லது மதுசார உற்பத்திப்பொருளை தொடர்பிலான அத்தகைய எல்லா விபரத்திரட்டுக்களையும் அல்லது தகவலையும், அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவுமாறு எவரேனும் உற்பத்தியாளரை அல்லது வியாபாரியைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் ஒன்றின்மூலம் ஏதேனும் விபரத்திட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ள உற்பத்தியாளர் அல்லது வியாபாரி,

ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தகவலை வெளிப்படுத்துவதிலிருந்து அத்தகைய ஆள் தடைசெய்யப்பட்டிருந்தால் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும்.

(3) அதிகாரசபை அல்லது அதன் உறுப்பினர் எவரும் அல்லது அதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், விடயத்திற்கேற்ப நீதிமன்றம் ஒன்றினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டாலன்றி அல்லது அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காகத் தவிர, அதிகாரசபையின் உடைமையில் உள்ள ஏதேனும் தகவலை அல்லது (1)ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரத் திரட்டுக்களை அல்லது ஏதேனும் தகவலை எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபை அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாதல் வேண்டும்.

**25.** அதிகாரசபையானது, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**26.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் மற்றும் சேவையாளர்களும், தண்டனைச்சட்டக்கோவையின் (அத்தியாயம் 19) கருத்தெல்லைக்குள்ளும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும், பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.

**27.** (1) அதிகாரசபையின் ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்துக்காக அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படவேண்டுமெனத் தேவைப்படுகின்றவிடத்து, அத்துடன் அந்நோக்கத்துக்காக உத்தேசிக்கப்பட்ட கொள்ளலுக்கு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் அங்கீகாரம் அளிக்கின்ற

விடத்து, அவ்வாதனமானது, பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, அதற்கிணங்கக் காணி கொள்ளல் சட்டத்தின் (அத்தியாயம் 420) கீழ்க் கொள்ளவும்படலாம்.

(2) அதிகாரசபைக்காக காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படுவதற்குச் செலுத்தப் படற்பாலதான பணத்தொகை எதுவும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*எவரேனுமாளினால் உறப்படும் செலவுகள் அதிகார சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**28.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது எவரேனுமாளினாற் செய்யப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கெதிராகத் தொடுக்கப்படும் ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்படும் எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அதிகாரசபையினால் செலுத்தப் படுதல் வேண்டும்.

*அமைச்சருக்கு தகவலைக் கொடுத்துதவுதல்.*

**29.** அமைச்சரானவர், அதிகாரசபையின் வேலை தொடர்பிலான விபரத்திரட்டுகளை, கணக்குகளை அத்துடன் வேறு தகவலை அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தமக்குக் கொடுத்துதவுமாறு காலத்துக்குக்காலம் அதிகாரசபையைப் பணிக்கலாம், என்பதுடன் அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றையும் அதிகாரசபை நிறைவேற்றுதல் வேண்டும்.

*ஒழுங்குவிதிகள்.*

**30.** (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் –

(அ) மனித உடனலத்துக்குத் தீங்குவிளைவிக்கின்ற அல்லது ஊறுவிளைவிக்கின்ற புகையிலை உற்பத்திப் பொருட்களை அடையாளங்காண்கின்றவையும்;

(ஆ) புகையைத் தோற்றுவிக்காத புகையிலை உற்பத்திப் பொருட்களின் வகைகளை அல்லது வகுதிகளைக் குறித்துரைக்கின்றவையும்,

ஆன ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குப் பின்னர் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்திற்கு முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எத்தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவிப்பானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் II

இருபத்தியொரு வயதுக்குக் குறைவான ஆட்களுக்கு ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளை விற்பதற்கான தடை.

**31.** (1) ஆளெவரும், இருபத்தியொரு வயதுக்குக் குறைவான எவரேனுமாளுக்கு ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளை விற்றலோ, விற்பனைக்கு முனைதலோ அல்லது விற்பனையை அனுமதித்தலோ அல்லது மேம்படுத்துதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நான்காயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ்க் காணப்பட்ட தவறொன்றுக்குக் குற்றவாளியாக எவரேனுமாள், தாம் எவ்வாளுக்குப் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளை விற்றாரோ அவ்வாள் இருபத்தியொரு வயதுக்கு மேற்பட்டவராக இருந்தாரென்பதை நிச்சயிப்பதற்கென நியாயமான எல்லா நடபடிகளையும் தாம் எடுத்தாரென எண்பிப்பது அவருக்கு எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

புகையிலை உற்பத்திப் பொருட்களை அல்லது மதுசார உற்பத்திப் பொருட்களை வழங்குகின்ற விற்பனை இயந்திரங்களை நிறுவுதலின் மீதான தடை.

**32.** (1) பொதுமக்கள் வந்துபோகக்கூடிய ஏதேனும் இடத்தில் ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளை வழங்குகின்ற அல்லது வழங்கக்கூடிய ஏதேனும் தன்னியக்க விற்பனை இயந்திரத்தை ஆள் ஒருவர் நிறுவுதல் அல்லது நிறுவு வதனையும் தொழிற்படுத்துவதனையும் அனுமதித்தல் ஆகாது.

(2) இப்பிரிவில் "ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளை வழங்குகின்ற அல்லது வழங்கக்கூடிய தன்னியக்க விற்பனை இயந்திரம்" என்பது -

(அ) ஒரு குற்றி நாணயத்தை அல்லது குறிப்பு நாணயத்தை உட்செலுத்துவதன்மூலம் அல்லது வேறு எவையேனும் வழிவகைகள் மூலம், தன்னியக்கமாகவாயினுஞ்சரி அல்லது கொள்வனைகாரரின் உதவியுடனாயினுஞ்

சரி விற்பனை என்றவகையாக ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளை வழங்குகின்ற ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஒவ்வொரு விற்பனைக்கிடையேயும் மீள நிரப்புதலைத் தேவைப்படுத்தாத,

ஏதேனும் சுயசேவை இயந்திரம் என்று பொருள்படும்.

(3) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*விதித்துரைக்கப் பட்டனவான புகையிலை உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதனை அல்லது விற்பதனைத் தடை செய்தல்.*

**33.** (1) ஆளொருவர் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை உற்பத்தி செய்யதலோ, இறக்குமதி செய்தலோ, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்ஆளாதலும்வேண்டும்.

*உடனலம் பற்றிய எச்சரிக்கை இல்லாமலும் அத்துடன் புகையிலை உற்பத்திப்*

**34.** (1) புகையிலை உற்பத்திப்பொருள் ஒன்றின் உற்பத்தியாளர் ஒருவர், அத்தகைய உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்படும் புகையிலை உற்பத்திப் பொருட்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு பொதியின்மீதும், அத்தகைய பொதியில் உள்ள புகையிலை உற்பத்திப்பொருள் ஒவ்வொன்றும் தார், நிக்கொட்டீன் என்பன

பற்றியதும் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உடனலம் பற்றிய எச்சரிக்கைகள் பற்றியதுமான கூற்றொன்றைக் கொண்ட விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பரிமாணங்களிலான சுட்டுத் துண்டொன்றை துலாம்பரமானவோர் இடத்தில் எளிதாக வாசிக்கத்தக்கவாறு அச்சிடப்பட்டு வெளிக்காட்டி வைக்கச் செய்வித்தல் வேண்டும். வெவ்வேறு அளவுகளைக்கொண்ட பொதிகள் தொடர்பில் வெவ்வேறு பரிமாணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

*பொருள் ஒவ்வொன்றிலுமுள்ள தார், நிக்கொட்டீன் உள்ளடக்கம் இல்லாமலுமான புகையிலை உற்பத்திப் பொருளின் விற்பனை மீதான தடை.*

(2) ஆளொருவர் புகையிலை உற்பத்திப்பொருட்களைக் கொண்ட பொதியொன்றை அத்தகைய பொதியின்மீது அத்தகைய பொதியிலுள்ள ஒவ்வொரு புகையிலை உற்பத்திப்பொருளும் கொண்டுள்ள தார், நிக்கொட்டீன் என்பன பற்றியதும் விதித்துரைக்கப்பட்ட உடனலம் பற்றிய எச்சரிக்கையைப் பற்றியதுமான கூற்றொன்றைக் கொண்ட விதித்துரைக்கப்பட்ட பரிமாணங்களிலான சுட்டுத் துண்டொன்று வெளிக்காட்டி வைக்கப்பட்டிருந்தாலொழிய, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*புகையிலை அல்லது மதுசாரம் பற்றிய விளம்பரங்கள் தடைசெய்யப்படுதல்.*

**35.** (1) ஆளொருவர், புகையிலை விளம்பரம் ஒன்றை அல்லது மதுசார விளம்பரம் ஒன்றை வெளியிடுதலோ, வெளியிடுவித்தலோ அல்லது அவ்விளம்பரம் வெளியிடப்படுவதற்கு அதிகாரமளித்தலோ ஆகாது.

(2) (அ) அத்தகைய புகையிலை உற்பத்திப்பொருளின் மீது அல்லது மதுசார உற்பத்திப்பொருளின்மீது அல்லது அத்தகைய புகையிலை உற்பத்திப் பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கும் ஏதேனும் பொதியின் மீது, புகையிலை

உற்பத்திப்பொருள் ஒன்றின் அல்லது மதுசார உற்பத்திப்பொருளொன்றின் வியாபாரச் சின்னமொன்றை அல்லது இனப்பெயரொன்றை வெளிக்காட்டுதல் ;

(ஆ) புகையிலை உற்பத்திப்பொருளொன்றின் அல்லது மதுசார உற்பத்திப்பொருளொன்றின் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் எவரும், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை உற்பத்திப் பொருட்கள் அல்லது மதுசார உற்பத்திப்பொருட்கள் பற்றி விபரிக்கின்றதும் அவ்வவற்றின் விலைகளைச் சுட்டிக்காட்டுகின்றதுமான அறிவித்தலொன்றை அத்தகைய உற்பத்திப்பொருளின் விநியோகிப் பாளர் ஒருவருக்கு அனுப்புதல் ;

(இ) புகையிலை உற்பத்திப்பொருட்கள் அல்லது மதுசார உற்பத்திப்பொருட்கள் பொதுமக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கக்கூடியனவாக இருக்கின்ற இடமொன்றுக்குள், அவ்விடத்தில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியனவாக இருக்கின்ற புகையிலை உற்பத்திப் பொருட்களை அல்லது மதுசார உற்பத்திப்பொருட்களை இனங்காட்டுவதும் அவ்வவற்றின் விலைகளைச் சுட்டிக் காட்டுவதுமான அறிவித்தலொன்றை வெளிக்காட்டுதல் ;

(ஈ) இலங்கையில் கிடைக்கக்கூடியதும், ஆனால் இலங்கைக்கு வெளியே அச்சிடப்பட்டதுமான புத்தகமொன்றில், சஞ்சிகையொன்றில் அல்லது புதினத்தாளொன்றில் அத்தகைய புத்தகம், சஞ்சிகை அல்லது புதினத்தாள் இலங்கையில் மட்டும் அல்லது பிரதானமாக இலங்கையிலேயே விற்கப்படுவதற்கு அல்லது விநியோகிக்கப்படுவதற்கு முன்னப்பட்டதாக இருந்தாலொழிய, புகையிலை விளம்பரமொன்றை அல்லது மதுசார விளம்பரம் ஒன்றை உட்புகுத்துதல் ;

(உ) இலங்கைக்கு வெளியேயிருந்து இலங்கைக்கு புகையிலை விளம்பரமொன்றை அல்லது மதுசார விளம்பரமொன்றைக் கொண்ட ஏதேனும்

தொலைக்காட்சி நிகழ்ச்சியை அல்லது வானொலி நிகழ்ச்சியை, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய கடத்தல் அல்லது ஒலிபரப்புதல் ஆனது, விடயத் துக்கேற்றவாறு, இலங்கையிலுள்ள பார்ப்போர் களினால் அல்லது கேட்போர்களினால் மட்டுமே அல்லது பிரதானமாக, இலங்கையிலுள்ள பார்ப் போர்களினாலேயே, விடயத்துக்கேற்றவாறு, பார்க்கப்படுவதற்கு அல்லது கேட்கப்படுவதற்கு முன்னப்பட்டதாக இருந்தாலொழிய, கடத்தல் அல்லது ஒலிபரப்புதல் ;

(ஊ) புகையிலை உற்பத்திப்பொருட்கள் அல்லது மதுசார உற்பத்திப்பொருட்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு நன்மையளிக்கின்ற ஏதேனும் அறிவியல், கல்வி, சமூக, மருத்துவ, தொழினுட்ப அல்லது வேறு விடயத்தை அல்லது தகவலை வெளியிடுதல், கடத்தல் அல்லது ஒலிபரப்புதல்,

(1) ஆம் உட்பிரிவின் மீறுகையொன்றாதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனு மாள் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபது இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் -

"மதுசார விளம்பரம்" என்பது,-

(அ) மதுபானம் அருந்துதலை ;

(ஆ) மதுசார உற்பத்திப்பொருள் கொள்வனவு செய்யப்படு தலை அல்லது பயன்படுத்தப்படுதலை ;

(இ) ஏதேனும் மதுசார உற்பத்திப்பொருள் தொடர்பில் அல்லது மதுசார உற்பத்திப்பொருட்களை உள்ளடக்கு கின்ற பொருட்கள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட வியாபாரச் சின்னம் ஒன்றை ;

(ஈ) ஒரு மதுசார உற்பத்திப்பொருளுடன் தொடர்புடைய இனப்பெயர் ஒன்றை ;

(உ) ஒரு மதுசார உற்பத்திப்பொருளொன்றின் உற்பத்தி யாளரின் பெயரை,

மேம்படுத்துகின்ற அல்லது மேம்படுத்துவதற்கு முனைகின்ற ஏதேனும் தெளிவான எழுத்து, அசையாப்படம் அல்லது அசையும் படம், குறி, சின்னம் அல்லது வர்ணங்கள் அல்லது பார்வைக்குரிய வேறு பிம்பம் அல்லது மேற்கூறப்பட்டவற்றின் ஏதேனும் சேர்க்கை எனப் பொருள்படும் ;

“வெளியிடுதல்” என்பது, “புகையிலை விளம்பரம்” அல்லது “மதுசார விளம்பரம்” ஒன்று தொடர்பாகப் பின்வரு வனவற்றை உள்ளடக்கும் :-

(அ) விளம்பரத்தை அல்லது விளம்பரத்தைக் கொண் டிருக்கும் எதனையும், எந்த இடத்தை அல்லது வாகனத்தைப் பொதுமக்கள் அணுகக்கூடியதாக இருக்கின்றதோ அந்த இடத்தில் அல்லது வாகனத் தில் அல்லது அந்த இடத்திலிருந்து அல்லது அந்த வாகனத்திலிருந்து அது பொதுமக்களால் பார்க்கக் கூடியவாறு அல்லது கேட்கப்படக்கூடியவாறு வெளிக்காட்டுத்தல், திரையிடுதல் அல்லது இசைத்தல் ;

(ஆ) பொதுமக்களுக்கு அல்லது பொதுமக்களில் ஒரு பிரிவினருக்கு கிடைக்கக்கூடியதாகவிருக்கின்ற அல்லது விநியோகிக்கப்படுகின்ற ஒரு புதினத் தாளில், சஞ்சிகையில், நிகழ்ச்சித்துண்டில், துண்டுப்பிரசுரத்தில், கைத்துண்டுப் பிரசுரத்தில் அல்லது வேறு ஆவணத்தில் விளம்பரத்தை உட்புகுத்துதல் ;

(இ) பொதுமக்களினால் அல்லது பொதுமக்களில் ஒரு பிரிவினரால் பார்க்கப்படுகின்ற அல்லது கேட்கப் படுகின்ற அல்லது பார்க்கப்படுவதற்கு அல்லது கேட்கப்படுவதற்கு முன்னப்படுகின்ற ஒரு திரைப் படத்தில், வீடியோவில், வானொலி நிகழ்ச்சியில் அல்லது தொலைக்காட்சி நிழச்சியில் அல்லது இணையத்தளத்தினூடாக விளம்பரத்தை உள்ள டக்குதல் ;

(ஈ) விளம்பரத்தை அல்லது விளம்பரத்தைக் கொண்டிருக்கும் எதனையும் பொதுமக்களுக்கு அல்லது பொதுமக்களில் ஒரு பிரிவினருக்கு விற்பனை செய்தல், வாடகைக்கு விடுதல் அல்லது வழங்குதல் அல்லது விற்பனைக்கு, வாடகைக்கு விடுவதற்கு அல்லது வழங்குவதற்கு முனைதல் ;

"புகையிலை விளம்பரம்" என்பது,-

(அ) புகைத்தலை ;

(ஆ) புகையிலை உற்பத்திப்பொருளொன்று கொள்வனவு செய்யப்படுதலை அல்லது பயன்படுத்தப்படுதலை ;

(இ) புகையிலை உற்பத்திப்பொருளொன்று தொடர்பில் அல்லது புகையிலை உற்பத்திப்பொருட்களை உள்ளடக்குகின்ற பொருட்கள் தொடர்பில் பதிவு செய் யப்பட்ட வியாபாரச்சின்னமொன்றை ;

(ஈ) புகையிலை உற்பத்திப்பொருள் ஒன்றுடன் தொடர்புடைய இனப் பெயரொன்றை ;

(உ) புகையிலை உற்பத்திப்பொருளொன்றின் உற்பத்தியாளரின் பெயரை,

மேம்படுத்துகின்ற அல்லது மேம்படுத்த முன்னுகின்ற ஏதேனும் எழுத்து, அசையாப்படம் அல்லது அசையும்படம், குறி, சின்னம் அல்லது தெளிவான வர்ணங்கள் அல்லது பார்வைக்குரிய வேறு பிம்பம் அல்லது கேட்கப்படக்கூடிய ஏதேனும் செய்தி அல்லது மேலே கூறப்பட்டவற்றின் ஏதேனும் சேர்க்கை எனப் பொருள்படும்.

*அனுசரணைகள் முதலியன வற்றைத் தடைசெய்தல்.*

**36.** (1) ஆளொருவர் -

(அ) ஏதேனும் கல்விச் செயற்பாடு அல்லது நிகழ்ச்சி என்பவற்றின் மேம்பாடு சம்பந்தமாக ;

(ஆ) அத்தகைய செயற்பாட்டுக்கு அல்லது நிழச்சிக்கு அத்தகைய புகையிலை உற்பத்திப் பொருளின் அல்லது

மதுசார உற்பத்திப்பொருளின் உற்பத்தியாளரினால், இறக்குமதியாளரினால் அல்லது விநியோகிப்பாளரினால் அல்லது அவரின் சார்பில் ஏதேனும் நிதிசார் அல்லது வேறு உதவி கொடுக்கப்பட்டிருக்கின்றதென்பதைச் சுட்டிக் காட்டுகின்றவாறான அல்லது ஏற்றுக்கொள்ளுகின்றவாறான அத்தகைய ஒரு முறையில்,

புகையிலை உற்பத்திப்பொருளொன்றின் அல்லது மதுசார உற்பத்திப்பொருளொன்றின் இனப்பெயரொன்றையோ அல்லது வியாபாரச் சின்னம் ஒன்றையோ அல்லது புகையிலை உற்பத்திப் பொருளுடன் அல்லது மதுசார உற்பத்திப்பொருளுடன் தொடர்புடைய ஏதேனும் சின்னத்தையோ அல்லது புகையிலை உற்பத்திப் பொருளொன்றின் அல்லது ஏதேனும் மதுசார உற்பத்திப் பொருளொன்றின் உற்பத்தியாளரினது பெயரை அத்தகைய புகையிலை உற்பத்திப் பொருளுடன் அல்லது மதுசார உற்பத்திப் பொருளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடையதாகப் பயன்படுத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

புகையிலை உற்பத்திப் பொருட்களை மற்றும் மதுசார உற்பத்திப் பொருட்களை இலவசமாக விநியோகம் செய்தல் முதலியன தடை செய்யப்படுதல்.

**37.** (1) ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளின் அல்லது மதுசார உற்பத்திப் பொருளின் உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது விநியோகிப்பாளர் ஒருவர் -

(அ) ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப்பொருளை இலவசமாக விநியோகித்தல் ஆகாது ;

(ஆ) பின்னர் விநியோகிப்பதற்கென வேறு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளை அல்லது மதுசார உற்பத்திப் பொருளை இலவசமாக வழங்குதலாகாது.

(2) ஆளொருவர், புகையிலை உற்பத்திப்பொருளொன்றின் அல்லது மதுசார உற்பத்திப் பொருளொன்றின் கொள்வனவு காரருக்கு, அவ்வுற் பத்திப்பொருளைக் கொள்வனவு செய்ததற்குப் பிரதிபலனாக அல்லது அத்தகைய கொள்வனவு செய்யப்பட்டதற் குச் சான்று கொடுத்துதவியதற்குப் பிரதிபயனாக ஆளெவருக்கும், ஏதேனும் பரிசை, கொடையை, காசுக்கழிவை, கழிப்பனவை அல்லது ஏதேனும் போட்டியில், அதிர்ஷ்ட லாபச்சீட்டில் அல்லது ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கான உரிமை எதனையும் வழங்குதல் ஆகாது.

(3) இயைபான வியாபாரத்தில் நிலவுகின்ற வீதங்களில் ஏதேனும் புகையிலை உற்பத்திப்பொருளின் அல்லது மதுசார உற்பத்திப் பொருளின் உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது விநியோகிப்பாளர் ஒருவர், வியாபாரக் கழிப்பனவொன்றை முனைவது (2) ஆம் உட்பிரிவின் மீறுகையொன்றாதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற புகையிலை உற்பத்திப் பொருளொன்றின் அல்லது மதுசார உற்பத்திப் பொருளொன்றின் எவரேனும் உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது விநியோகிப்பாளர் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தவ றொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ் சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்த கைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*புகையிலை உற்பத்திப் பொருட்கள் மற்றும் மதுசார உற்பத்திப பொருட்கள் ஆகியவற்றின் வியாபாரச் சின்னங்கள் தொடர்பான தவறுகள்.*

**38.** (1) ஆளொருவர், புகையிலை உற்பத்திப் பொருளொன் றாகவிராததும் அல்லது மதுசார உற்பத்திப் பொருளொன்றாக விராததும், புகையிலை உற்பத்திப்பொருளொன்றின் அல்லது ஏதேனும் மதுசார உற்பத்திப் பொருளின் வியாபாரச் சின்னம், தனித்துவமான சின்னங்கள், தெளிவான பகுத்துக்காட் டும் அடையாளம் அல்லது இனப்பெயர் ஆகியவற்றைக் கொண் டுள்ளதுமான ஏதேனும் பொருளை விநியோகித்தலோ, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ ஆகாது.

(2) புகையிலை உற்பத்திப்பொருள் ஒன்றல்லாத, ஆனால் புகையிலை உற்பத்திப்பொருள் ஒன்றின் தோற்றத்தைக் கொண்ட ஏதேனும் பொருளை ஆளொருவர் உற்பத்தி செய்தலோ அல்லது விற்பனைக்காக இறக்குமதி செய்தலோ அல்லது இலவசமாக விநியோகித்தலோ ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் அல்லது (2) ஆம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொதுமக்கள் வருகின்ற இடமொன்றில் புகைத்தல் தவறொன்றாதல்.

**39.** (1) ஆளெவரும், ஏதேனும் அடைக்கப்பட்ட பொது இடத்தில் ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளைப் புகைத்தலோ அல்லது எவரேனும் ஆளைப் புகைக்க அனுமதித்தலோ ஆகாது.

(2) ஏதேனும் அடைக்கப்பட்ட பொது இடத்தின் சொந்தக்கார ராக, குடியிருப்பாளராக, உரிமையாளராக, முகாமையாளராக, நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது பொறுப்பாளராகவுள்ள ஆளாகவிருக்கும் எவரேனும் ஆள், அத்தகைய ஏதேனும் பொது இடத்தினுள் ஆளெவரும் ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொரு ளைப் புகைக்காகதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும் —

(அ) முப்பது அறைகளை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டுள்ள ஏதேனும் ஹோட்டல், விருந்தினர் மனை அல்லது தங்குநர் மனை ;

(ஆ) ஆகக் குறைந்தது முப்பது ஆட்களுக்கான ஆசனக் கொள்ளளவுடைய ஏதேனும் சிற்றுண்டிச் சாலை அல்லது களரி ; அல்லது

(இ) ஏதேனும் விமானநிலையம்,

(1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறாயினும், புறநீங்கலாகப் புகைத்தலுக்கென ஒதுக்கப்பட்ட விடயத்துக்கேற்ப, அடைக்கப்பட்ட வெளியிடத்தை அல்லது அடைக்கப்பட்ட இடப்பரப்பை அதன் வளவுகளினுள் கொண்டிருக்கலாம். அத்தகைய இடப்பரப்பு போதிய காற்றோட்டவசதி வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்பட்ட காற்றுத்தர நியமங்களுக்கு இசைந்தொழுகுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை யதிபதியின் கலந்தாலோசனையுடன், காலத்துக்குக்காலம், இப் பிரிவின் ஏற்பாடுகளை வலுவுறுத்துவதற்காகவும் கண்காணிப்ப தற்காகவும், தேவைப்படக்கூடியவாறான ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கு ஒவ்வாதனவாகவிராத பொதுவான அல்லது விசேட மான பணிப்புகளை வழங்கலாம்.

(4) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதவானொருவர் முன்ன ரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன் றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"பொது இடம்" என்பது, உரிமை என்ற வகையாக அல்லது வேறுவகையாக பொது மக்கள் செல்கின்ற ஏதேனும் இடம் என்று பொருளாகும் ; அத்துடன்

"அடைக்கப்பட்ட பொது இடம்" என்பது, ஏதேனும் அரசாங்கத் திணைக்களம், நியதிச் சட்டமுறையான அதிகாரசபை அல்லது சபை அல்லது பகிரங்க நிறுவனம், அலுவலக வளவுகள், நீதிமன்றம், கேட்போர்கூடம், விளை யாட்டுகளுக்கான கட்டிடத்தொகுதி, வைத்தியசாலை, மருந்தகம், மருந்தளிக்கும் நிலையம், ஆய்வுகூடம், பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வேறு கல்வி நிறுவனம், நூலகம், அரும்பொருட்சாலைகள், வழிபாட்டு இடங்கள், ஹோட்டல், விருந்தினர்மனை, தங்குநர்மனை, விடுதி, சிற்றுண்டிச்சாலை, களரி, இன்ரர்நெற் நிலையம், சினிமா, தியேட்டர், நவீன

சந்தை, விமான நிலையம், ஒரு புகையிரத நிலையத்திலான அல்லது பஸ்வண்டி முடிவிடத்திலான காத்திருக்கும் அறை ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சாதனம், கட்டிடம், ஏதேனும் கட்டி அமைக்கப்பட்ட இடம் மற்றும் தூக்கி என்பவற்றையும் உள்ளடக்கும்.

*புகையிலை உற்பத்திப் பொருட்களின் உட்சேர்க்கைகளுக்கான பரீட்சிப்புகள்.*

**40.** புகையிலை உற்பத்திப்பொருள் ஒன்றின் உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் மற்றும் இறக்குமதியாளர் ஒவ்வொருவரும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளிலும், அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளரின் கலந்தாலோசனையுடன், விடயத் துக்கு ஏற்றவாறு, அத்தகைய உற்பத்தியாளரால் அல்லது இறக்குமதியாளரால் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வோர் இனத்தைச் சேர்ந்த புகையிலை உற்பத்திப் பொருளின் உட்சேர்க்கைகளை இனங்காணும் நோக்கத்திற்காகவும் அத்துடன் அவ்வுட்சேர்க்கைகளின் அந்தந்த அளவுகளுக்கும் அவசியமான பரீட்சிப்பு ஒன்றை நடாத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பரீட்சிப்பின் பெறுபேறுகளை அதிகாரசபைக்கு அனுப்புவித்தலும் வேண்டும்.

*மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான ஏற்பாடு.*

**41.** மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆம் அத்தியாயம்) பிரிவு 151 இன் உட்பிரிவு (1) அல்லது பிரிவு 151 இன் உட்பிரிவு (1அ) அல்லது பிரிவு 151 இன் உட்பிரிவு (2) என்பவற்றின் கீழான தவறொன்றைப் புரிந்தமைக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள் நீதிமன்றமொன்றின் முன்னர் தோன்றுமிடத்து அல்லது நிறுத்தப்படுமிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பின் அத்தகைய தவறுக்கான விளக்கம் முடிவுறும் வரை, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட சாரதி உரிமத்தை இடை நிறுத்தலாம் ; அத்தகைய ஆள் விளக்கத்துக்குப் பின்னர் அத்தகைய தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படின், வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திக் கொண்டு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலப் பகுதிக்கு அத்தகைய சாரதி உரிமத்தை இடைநிறுத்தலாம்.

*சான்று.*

**42.** இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்குத் தொடுப்பில், ஏதேனும் பொருள் புகையிலை உற்பத்திப்பொருள் ஒன்றாகவுள்ளதா அல்லது ஏதேனும் மதுசார உற்பத்திப்பொருளாகவுள்ளதா என்பதுபற்றி அல்லது புகையிலை உற்பத்திப்

பொருளொன்றின் அல்லது ஏதேனும் மதுசார உற்பத்திப் பொருளின் உட்சேர்க்கைகள் பற்றி உள்ளதா என்ற ஏதேனும் கேள்வி எழுகின்றவிடத்து, சான்றிதழிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொருள் புகையிலை உற்பத்திப்பொருளொன்று அல்லது ஏதேனும் மதுசார உற்பத்திப் பொருள் என்ற பொருள்பட்டதான அல்லது சான்றிதழிற் குறிப்பீடு செய்யப்பட்ட புகையிலை உற்பத்திப் பொருளின் அல்லது ஏதேனும் மதுசார உற்பத்திப் பொருளின் உட்சேர்க்கைகள் பற்றியதான அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளரின் கைப்பட அளிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற சான்றிதழ் ஒன்று, கையொப்பத்துக்கான எண்பிப்பு இல்லாமலேயே சான்றில் ஏல்தகவு டையதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கான முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

*நானாவிதமான தவறுகள்.*

**43.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அவரின்மேல் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்க ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்து தவத் தவறுகின்ற ;

(ஆ) அவரால் கொடுத்துதவப்படும் ஏதேனும் விபரத் திரட்டில் அல்லது தகவலில் தெரிந்துகொண்டே ஏதேனும் பொய்க்கூற்றை அளிக்கின்ற ;

(இ) அதிகாரசபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருந்துகொண்டு, இச்சட்டத்தின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது பிரயோகித்தல் சம்பந்தமாக அல்லது தமது பணிகளை நிறைவேற்றுகையில் அல்லது நிறைவேற்றுதல் சம்பந்தமாக அவரினால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை, இச்சட்டத்தினால் அத்தகைய தகவலை அவர் வெளிவிடுவதற்கு எந்நோக்கமொன்றுக்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அந்நோக்கம் தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்திற்கு ஆளெவருக்கும் வெளிவிடுகின்ற ; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற அல்லது அதிகாரசபையினால் அவருக்கு விடுக்கப்படுகின்ற ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற,

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழத் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் எத்தவறொன்றுக்குத் தண்டனை எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ, அத்தவறொன்றை புரிகின்ற ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது -

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும் ;

(ஆ) அவ்வாட்கள் குழுவானது குழுமம் ஒன்றாக இருந்தால், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தவறுக்குக் குற்றவாளிகளாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறானது அவரது அறிவுக்கு எட்டாமல் புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தால், அவர் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படலாகாது.

(4) அதிகாரசபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், இச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும்

நோக்கத்துக்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் பகிரங்க அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**44.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**45.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

"மதுசார உற்பத்திப்பொருள்" என்பது, ஒரு சதவீத (1%) அல்லது அதற்கு மேற்பட்ட கனஅளவு மதுசாரத்தைக் கொண்ட பானமொன்று எனப் பொருள்படும் ;

"தவிசாளர்" என்பது, 8 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் தவிசாளர் எனப் பொருள்படும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை எனப் பொருள்படும் ; அத்துடன், அது, அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும். புரியப்படும் அத்துடன் நிறை வேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றை நேரொத்த அல்லது அவற்றைப் போன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை, பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறை வேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை" என்பது, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சட்டத் தினால் தாபிக்கப்பட்ட தேசிய அபாயகரமான ஔட தங்கள் கட்டுப்பாட்டுச் சபை எனப் பொருள்படும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று எனப் பொருள்படும்;

"தார்" என்பது, பச்சையான நீர் நீக்கப்பட்ட நிக்கொட்டீன் இல்லாத புகையின் வடிவமாகும் எனப் பொருள்படும்;

"புகையிலை உறப்பத்திப்பொருள்" என்பது, புகையிலையிலிருந்து முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ உற்பத்தி செய்யப்பட்டதும், புகைப்பதற்கென, முகர்தலுக்கென, உறிஞ்சப்படுவதற்கென அல்லது வாயில் போட்டு மெல்லப்படுவதற்கென முன்னப்பட்டதுமான ஏதேனும் உற்பத்திப்பொருள் எனப் பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*